செய்தி வெளியீடு எண்:670 நாள்:01.09.2021

## செய்தி வெளியீடு

தலைமைச் செயலகத்தில் செயல்பட்டு வரும் முதலமைச்சரின் தனிப்பிரிவில், அன்றாடம் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மாவட்டங்கள்/துறைகளுக்கு அனுப்பப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சமீப காலங்களில், இலவச வீடு ஒதுக்கீடு கோரி தினமும் சென்னை உள்ளிட்ட அனைத்து மாவட்டங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் நீண்ட வரிசையில் முதலமைச்சரின் தனிப்பிரிவில் மனுக்களை அளிக்க காத்து நிற்கின்றனர். முதியோர், கர்ப்பிணி பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளும் இதில் அடங்குவர். தற்போது கோவிட்–19 என்ற பெருந்தொற்று கட்டுக்குள் இருந்தாலும், இவ்வாறு ஆயிரக்கணக்கான பொது மக்கள் இத்தனிப்பிரிவில் மனுக்களை அளிக்க குவிந்து வருவதால், முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளி கடைபிடித்தல் போன்ற வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றுவதில் தொய்வு ஏற்பட்டுள்ளது.

**2.** முதலமைச்சரின் தனிப்பிரிவில் பொதுமக்களிடமிருந்து நேரடியாக மனுக்களை பெறுவதோடு மட்டுமின்றி, தபால்/ இணையதளம் (www.cmcell.tn.gov.in) / மின்னஞ்சல் (cmcell@tn.gov.in) மற்றும் முதலமைச்சர் உதவி மையம் (cmhelpline.tnega.org) ஆகிய வழிமுறைகளிலும் மனுக்கள் பெறப்பட்டு வருகிறது. அவ்வாறு இணைய வழியாக பெறப்படும் மனுக்களுக்கான ஒப்புகை சம்பந்தப்பட்டவரின் அலைபேசிக்குக் குறுந்தகவலாக அனுப்பப்படுகிறது. கோரிக்கை (அல்லது) மனு எண் மூலமாகவே தங்கள் கோரிக்கை நிலை குறித்து, இணைய வழியாக தெரிந்து கொள்ளலாம். பொதுமக்களிடம் நேரடியாகவோ, தபால் மூலமாகவோ அல்லது இணைய வழியாகவோ, எவ்வழியில் பெறப்பட்டாலும், முதலமைச்சரின் தனிப்பிரிவில் அனைத்து மனுக்களுக்கும் ஒரே மாதிரியான நடைமுறையே பின்பற்றப்படும்.

**3.** ஆகையால், கொரானா பெருந்தொற்று வழிகாட்டு நெறிமுறைகளைக் கடைபிடிக்கும் வகையில், முதலமைச்சரின் தனிப்பிரிவில் பொதுமக்கள் தினமும் நேரடியாக மனுக்களை அளிப்பதற்காக ஆயிரக்கணக்கில் கூடுவதை தவிர்த்து, இணையவழி சேவைகளை பயன்படுத்தி மனுக்களை அளித்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9